1981 ஆகஸ்ட் 31]

(ஆ) இல்லையெனில் சிபாரிசினை மறு பரிசீலனை செய்து செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) இந்த பரிந்துரையை அரசு ஆராய்ந்தது. நிர்வாக காரணங்களுக்காக இதை ஏற்பதற்கில்லை என அரசு முடிவு எடுத்துள்ளது.

(ஆ) மறு பரிசீலனை செய்யும் எண்ணம் இல்லை,

கோவை மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் பட்டதாரி எழுத்தாளர்கள்

*வினா எண். 109 திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மத்திய கூட்டுறவு வங்கிகளில் அமர்த்தப்பட்ட பட்டதாரி எழுத்தர்களுக்கு ஆறு ஆண்டு காலமாக ஊதிய உயர்வு வழங்கப்படாதது பற்றி அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) கூட்டுறவு பயிற்சி பெறாத 45 பட்டதாரி எழுத்தர்களையும் மாலை நேர கூட்டுறவுப் பயிற்சிக்கு அனுப்பி, அவர்கள் வகிக்கும் எழுத்தர் நிலை பதவிக்கு அவர்களை தகுதி உள்ளவர்களாக்கி ஊதிய உயர்வு அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[முற்பகல் 9-40]

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மத்திய கூட்டுறவு வங்கிகளிலே எல்லாம் இம்மாதிரி கூட்டுறவுப் பயிற்சி பெறாத பட்டதாரி ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த கோவை மத்திய வங்கி ஊழியர்களுக்கு மட்டும் மறுக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணம் என்ன? அங்கே உள்ள தனி அதிகாரி அங்குள்ள தொழிலாளர்களை இரண்டு பிரிவினராகப் பிரித்து கொண்டிருக்கிறார். ஆகவே அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணுவதைப்போல இது கோவைக்கு மட்டுமே உரிய பிரசினை அல்ல; இப்படி உதவி ஆய்வர்களைப் பொறுத்தவரையிலும் எல்லா மாவட்டங்களிலும் அவர்கள் இருக்கிறார்கள்.

உதவி ஆய்வர்களில் இருந்து இளநிலை ஆய்வர்களாக ஆக வேண்டும் என்று ஒரு கோரிக்கை இருக்கிற காரணத்தினாலும் தட்டெழுத்துப் பிரிவினர்களும்கூட அந்தப் பதவி உயர்வுக்கு வர வேண்டும் என்ற கோரிக்கை வைத்திருக்கிற காரணத்தினாலும்,

அரசே அதை ஆய்ந்து இதை வேண்டாம் என முடிவெடுத்திருக் கிறது. 1979-லே இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அதை இந்தக் கோவை வங்கிக்கும் அறிவித்திருக்கிற காரணத்தினால அரசின் முடிவை அவர்கள் நடைமுறைப்படுத்துகிறார்கள்.

திரு. வெ. அரங்கராசன்: தலைவர் அவர்களே, பட்டதாரி களை மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலே எழுத்தர்களாக நியமித்து உள்ளதாகவும் அவர்களுக்குப் பயிற்சி அளித்து நிரந்தரம் ஆக்கப் போவதாகவும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். விதிகளில் கூட்டுறவு மேற்பார்வையாளர்களையும் எழுத்தர்களாக நியமிக்க வேண்டும் என்று விதி இருந்தும் அதை மீற எந்த ஆண்டு இவர் களை நியமித்தார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப் பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பு என்னிடம் தற்போது இல்லை. ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே அவர்கள் அப்படி வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்கின்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. பல ஆண்டுகளாக பணியிலே அவர்கள் அமர்ந்து விட்ட காரணத்தினால், அவர்கள் எந்த முறையிலே அமர்த்தப் பட்டுவிட்டாலும் கூட அவர்கள் அந்தத் தகுதியினைப் பெற, அந்தப் பயிற்சியினைப் பெற்று, தகுதியைப்பெற்றுவிடுவார் களானால் போதும் என்ற முறையில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தியாவிலேயே புகழ் மிக்க அங்காடியாக இருந்த சிந்தாமணி அரசியல் கட்சிகளின் தலையீட்டால், சீர்குலைந்து சின்னாபின்னமாக ஆகி கிடப்பது அமைச்சருக்குத் தெரியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி 6 ஆண்டுக்காலமாக அவர்கள் ஊதிய உயர்வு பெறாததைக் குறித்து.

திரு. கோவைத்தம்பி: இன்று மத்திய கூட்டுறவு மத்திய வங்கி பயன்படாமல் முடமாக்கப்பட்டதும், அங்கே இருக்கின்ற ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்ட தற்கு, கடந்த காலங்களிலே ஏற்பட்ட அரசியல் தலையீடு என்பதை ஆராய்ந்து அமைச்சர் அவர்கள் அங்கே பணியாற்றுகிற வர்கள் எந்த அரசியல் கட்சியிலும் ஈடுபடக்கூடாது என்று ஒரு சட்டத்தை கொண்டு வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கியிலே பணியாற்றுகின்ற ஊழியர் களுக்கு ஊதியம் இல்லை என்ற நிலை இல்லை. வங்கிகள், வங்கிகளின் கிளைகளிலே பணியாற்றுகின்றவர்களுக்கு ஊதியம் இருக்கின்றன. ஆனால், வங்கிகளை ஒட்டிய கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் வேண்டும் என்றால் சம்பளம் பெறமுடியாத நிலையில் இருந்தார்கள். அதற்குக்

காரணம் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே கடன் வழங்கும் தகுதியினை இழந்து, வாங்கிய கடனை வசதி படைத்த விவசாயிகள், காலத்திலே கட்டாத காரணத்தினால், பைனான்சியல் வையபிலிட்டினைக் கூட இழந்து இருந்தது. அந்த நிலையைக் கூட மாற்றி, தற்போது அந்த வங்கிகள் கடன் வழங்கும் தகுதியைப் பெற்று, ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கும் தகுதியினைத் தற்போது பெற்றிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் பயிற்சியைப் பெறாத ஊழியர்கள் குறிப்பிட்ட ஒரு சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால், கூட்டுறவுப் பயிற்சிக்கு அனுப்பாமல் தனி அதிகாரி தாமதம் செய்கிறார்கள். அதைப்போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, தனி அதிகாரிகள் அப்படி தாமதம் செய்வதாக தகவல் இல்லை. ஆனால் நான் ஏற்கனவே சொன்னதைப்போல, பல ஆண்டுகளுக்கு முன்னாலே பணியிலே அமர்த்தப்பட்டவர்கள், தகுதி இல்லாமல் அமர்த்தப்பட்டவர்களை, வீட்டுக்குக் கூட அவர்களை அனுப்பி இருக்கலாம். பல ஆண்டுகள் பணியில் இருந்து விட்டார்கள். பிள்ளைக் குட்டிகளைப் பெற்று குடும்பங்களோடு இருக்கின்ற அவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக அவர்களுக்குப் பயிற்சி அளித்து வேலைக்கு சேர்க்கவேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. இது நடைமுறைப்படுத்தப்படும்.

தமிழ்நாடு விற்பனை இணையம் மூலம் விற்பனை செய்யப்பட்ட உரங்கள்.

*வினா எண் 70—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இந்த ஆண்டு (198) ஜூன் மாதத்தில் மத்திய அரசு உரங்களின் விலையை ஏற்றியபொழுது டான்பெட் மார்க்கெட்டிங் சொசைட்டியில் இரண்டு மூன்று முன் தினங்கள் வரையில் தனி வியாபாரிகளுக்கு விற்கப்பட்ட உரங்கள் எவ்வளவு?

(ஆ) அதனால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு யாது?

(இ) இவ்விழப்பை தனி வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கும் எண்ணம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) மத்திய அரசு உரங்களின் விலையை 8-6-80 முதல் ஏற்றிய பொழுது தமிழ்நாடு விற்பனை இணையம் தனது சில்லரை விற்பனை நிலையங்கள் மூலம் இரண்டு மூன்று முன் தினங்கள் வரையில் தனி வியாபாரிகளுக்கு உரங்கள் எதுவும் விற்கவில்லை.